நல்லூர் கிளை நூலகம்
யாழ்ப்பாணம்

# இந்தியாவின் பிடியில் கப்பல் இருக்கையிலேயே 'கிட்டு' இறந்தார்; இந்தியாவே கொலையாளிகள்

(கொழும்பு)

இந்திய அதிகாரி களின் கட்டுப்பாட்டின் கீழ் புலிகளின் கப்பல் இருக்கையிலேயே கிட்டுவின் இறப்பு நிகழ்ந்துள்ளதால் கிட்டுவின் இறப்புக்கு இந்தியாவே கொலையாளி என புலிகள் குற்றம் சுமத்துவார்களென 'வெரித்தாஸ்' வானொலி தெரிவித்தது. 'வெரித்தாஸ்' மேலும் கூறு

(2-ம்பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சியை அறிந்தும் இந்தியா துரோகமிழைத்தது

(யாழ்ப்பாணம்)

இலங்கை பிரச்னைக்கு சர்வ தேச ஒத்துழைப்புடன் ஓர் தீர்வு காணும முயற்சியல் தமிழீழம் நோக்கி தளபதி கிட்டு வந்தது தெரிந்தும் அவரை வழிமறித்து கைது செய்ய முயன்றதன் மூலம் திரு கிட்டுவினதும் ஏனைய வேங்கைகளினதும் இறப் பிற்கு இந்திய அரசு காரணமாயிருந்து பெரும் துரோகமிழைத்துள்ளது

(2-ம் பக்கம் பார்க்க)

பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 05 இதழ் 342
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 18 — 01 — 1993

## இந்தியாவின் சதிக்கு பலியான வேங்கைகள்

(யாழ்ப்பாணம்)

வங்கக் கடலில் இந்தியாவின் துரோகத் தனத்தால் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட போராளிகளின் விபரம் வருமாறு:-

கேர்ணல் கிட்டு (சதாசிவம் கிருஷ்ணகுமார், வல்வெட்டித்துறை). ★ லெப். கேணல் குட்டிசிறி (இராசையா சிறிகணேசன், சுதுமலை வடக்கு, மானிப்பாய்). ★ மேஜர் பலரவன் [வேலன்] (சுந்தரலிங்கம் சுந்தரவேல், வியாபாரி மூலை, பருத்தித்துறை). ★ கடற்புலி கப்டன் ஜீவா (நடராசா மார்க் மஜயு ஜ, கொய்யாத்தோட்ட ஒழுங்கை, பாசையூர், யாழ்ப்பாணம்). ★ கடற்புலி கப்டன் குண

(4-ம் பக்கம் பார்க்க)


# இலங்கைத்தமிழர் பிரச்னைக்கு ஐரோப்பிய சமரசத்தை எதிர்த்தே கிட்டுவை இந்தியா பலிவாங்கியது

## விடுதலை புலிகள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

வங்கக் கடலில் இந்திய கடற்படை திரு. கிட்டுவின் கப்பலை இடைமறித்தபோது கிட்டுவின் சமாதான முயற்சி இந்திய அரசிடம் கூறப்பட்டது. ஆனால் இந்திய அரசு, ஐரோப்பிய சமாதான முயற்சியையோ மேற்குலக மத்தியஸ்தம் மூலம் தமிழர் பிரச்னைக்கு சமாதான தீர்வு ஏற்படுவதையோ விரும்பவில்லை. அத்துடன் தனது கடலாதிக்க பொறிக்குள் சிக்கிவிட்ட புலிகளின் முக்கிய தளபதியை ஒழித்து விடவே இந்தியா விரும்பியது. இதனல் எமது தளபதி கிட்டு இந்தியாவின் நயவஞ்சகச் சூழ்ச்சிக்கு பலியாக நேர்ந்தது'

(2 ம் பக்கம் பார்க்க)



★ கடலில் தகர்க்கப்பட்ட

## 3 நாட்கள் துக்கதினம்; புதன் ஹர்த்தால்

(யாழ்ப்பாணம்)

இந்திய அரசின் மிலேச்சத்தனமான சதி நடவடிக்கையால் பலியாகிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த தளபதியும், மத்திய குழு உறுப்பினருமாகிய கேணல் கிட்டு மற்றும் லெப்டினன்ட் கேணல் குட்டிசிறி உட்படப் பத்துப் புலி வீரர்களுக்கு மரியாதை செலுத்துவதுடன், இந்திய அரசுக்குக் கண்டனத்தையும், தேசிய ரீதியான எதிர்ப்பையும் தெரிவிக்குமுகமாக 18, 19, 20ம் திகதிகளில் தமிழீழம் எங்கும் துக்க தினங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நாட்களில் தமிழீழ மக்களின் வாழ்விடங்களில்,

(4-ம் பக்கம் பார்க்க)

இலங்கைத்தமிழர் பிரச்னைக்கு

ம வருமாறு:- ... ரவன் (வேலன்) ... (4-ம் பக்கம் பார்க்க)
கேர்ணல் கிட்டு (கமாண்டர்) சுந்தரவேல், ...யாபாரி

# ஐரோப்பிய சமரசத்தை எதிர்த்தே

# கிட்டுவை இந்தியா பலிவாங்கியது

## விடுதலை புலிகள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

வங்கக் கடலில் இந்திய கடற்படை திரு. கிட்டுவின் கப்பலை இடைமறித்தபோது கிட்டுவின் சமாதான முயற்சி இந்திய அரசிடம் கூறப்பட்டது. ஆனால் இந்திய அரசு, ஐரோப்பிய சமாதான முயற்சியையோ மேற்குலக மத்தியஸ்தம் மூலம் தமிழர் பிரச்னைக்கு சமாதான தீர்வு ஏற்படுவதையோ விரும்பவில்லை. அத்துடன் தனது கடலாதிக்க பொறிக்குள் சிக்கிவிட்ட புலிகளின் முக்கிய தளபதியை ஒழித்து விடவே இந்தியா விரும்பியது. இதனால் எமது தளபதி கிட்டு இந்தியாவின் நயவஞ்சகச் சூழ்ச்சிக்கு பலியாக நேர்ந்தது"

(2 ம் பக்கம் பார்க்க)



## 3 நாட்கள் துக்கதினம்; புதன் ஹர்த்தால்

(யாழ்ப்பாணம்)

இந்திய அரசின் மிலேச்சத்தனமான சதி நடவடிக்கையால் பலியாகிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த தளபதியும், மத்திய குழு உறுப்பினருமாகிய கேணல் கிட்டு மற்றும் லெப்டினன்ட் கேணல் குட்டிசிறி உட்படப் பத்துப் புலி வீரர்களுக்கு மரியாதை செலுத்துவதுடன், இந்திய அரசுக்கு கண்டனத்தையும், தேசிய ரீதியான எதிர்ப்பையும் தெரிவிக்குமுகமாக 18, 19, 20ம் திகதிகளில் தமிழீழம் எங்கும் துக்க தினங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நாட்களில் தமிழீழ மக்களின் வாழ்விடங்களில்,

(4-ம் பக்கம் பார்க்க)

## ★ கடலில் தகர்க்கப்பட்ட புலிகளின் கப்பல் மூழ்கியது 4 கருகிய சடலங்கள் மீட்பு?

(சென்னை)

வங்கக் கடலில் வெடித்துச் சிதறிய புலிகளின் கப்பல் நேற்று முன்தினமிரவு கடலில் முற்றாக மூழ்கிவிட்டதாகவும் இதிலிருந்து இந்தியகடற்படை கமாண்டோக்கள் கருகிய நிலையிலிருந்து நான்கு சடலங்களை மீட்டுள்ளதாகவும் இந்திய பாதுகாப்புதுறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில், எரிந்து கொண்டிருந்த இக்கப்பல் மூழ்குவதற்கு சிலநிமிடங்களுக்கு முன் இந்திய கடற்படையின் அதிரடிப்படை (கமாண்டோ) அந்தக் கப்பலினுள் நுழைந்து அடையாளம் தெரியாத அளவிற்கு கருகியிருந்த 4 சடலங்களை அப்புறப்படுத்தியதாம்.

இந்த உடல்கள் யார் யாருடையது என்பது கண்டுபிடிக்கப்படமுடியாத போதிலும் இதில் ஒரு உடல் கிட்டு என்று தங்களால் கூறமுடியுமென இந்திய இராணுவம் அறிவித்துள்ளது. மேலும் இக்கப்பலை ஓட்டிவந்த கப்பல் கப்டனையும் தாங்கள் கைது

(4-ம் பக்கம் பார்க்க)

## குடாநாடு கண்ணீர் அஞ்சலி; எங்கும் ஒரே சோகமயம்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் யாழ். மாவட்ட தளபதி கேர்ணல் கிட்டுவும், ஏனைய ஒன்பது போராளிகளும் வங்கக் கடலில் இந்திய அரசின் சதிச்செயலுக்கு இலக்காகி வீரமரணமடைந்த செய்தி தமிழீழமெங்கும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது

நேற்று அதிகாலை இச்செய்தி தமிழீழமெங்கும் காட்டுத்தீ போல் பரவியதையடுத்து மக்கள் சோகத்தில் மூழ்கினர். இதற்கு அனுதாபம் தெரிவிக்குமாயபோல வானமும்மப்பும் மந்தாரமுமாகக் காணப்பட்டது.

சிறுவர்கள் முதல் வயோதிபர் வரையில்சோகஇழப்புடன் வீதிகள், ஒழுங்கைகள், வீடுகள் என்றில்லாது எங்குமே தோரணங்கள், வாழைகள்,

(4-ம் பக்கம் பார்க்க)

## கிட்டு வீட்டிலும் மக்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பலாலி வீதியில் உள்ள தளபதி கேணல் கிட்டுவின் வீட்டு வாசலில் பந்தல் அமைக்கப்பட்டு தளபதி கிட்டுவின் பெரிய அளவிலான படம் வைத்து மாலை போடப்பட்டிருந்தது. மக்கள் ஆயிரக்கணக்கில் வந்து அஞ்

4ம் பக்கம் பார்க்க)

## கப்பலில் ஆயுதம்; புலிகள் மறுப்பு

(லண்டன்)

வங்கக் கடலில் விடுதலைப் புலிகளின் தளபதி திரு கிட்டு வந்த கப்பலில் வெடி மருந்துகளும், ஆயுதங்களும்கொண்டு வரப்பட்டதாக இந்திய அரசு தெரிவித்திருப்பதை விடுதலைப் புலிகள் முற்றாக மறுத்திருப்பதாக பி. பி. ஸி. நேற்றிரவு தெரிவித்தது

சமாதான திட்டம் பற்றி புலிகளின் தலைவருடன் பேச்சுக்கள் நடாத்தும் முயற்சியாகவே திரு. கிட்டு தமிழீழம் நோக்கி சென்றதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனராம்.

மேலும் இக்கப்பல் பற்றி விடை கிடைக்காத பல வினாக்கள் எழுந்துள்ளதாகவும் இக்கப்பல் எங்கிருந்து வந்து கொண்டிருந்ததென்றும் தெரியவில்லையெனவும் பி. பி. ஸி.மேலும் தெரிவித்தது. (இ)

## தமிழ் குழுக்கள் - முஸ்லிம் அமைப்புகளுக்கு கொழும்பில் பாகிஸ்தான் படை ஆயுதப் பயிற்சி

(கொழும்பு)

பாகிஸ்தானின் உளவுப் பிரிவான "இன்ரசர்வீஸ் இன்ரலஜன்ஸ்" (ஐ. எஸ். ஐ.) அமைப்பு பெருமளவு தமிழ் குழுக்களுக்கும், முஸ்லிம் இளைஞர்களுக்கும் கொழும்பில் வைத்து ஆயுதப் பயிற்சி அளித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக இப்பயிற்சி நடைபெற்று வருவது தெரியவந்துள்ளதாம். இது குறித்து இந்திய அரசு தனது கடும் ஆட்சேபத்தை இலங்கையிடம் தெரிவிக்கவுள்ளதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும் தமிழகத்திலிருந்து பாகிஸ்தானின் உளவுப் பிரிவின் தளமொன்றை நிறுவ மேற்படி ஐ. எஸ். ஐ மேற்கொண்ட முயற்சி குறித்து ஆதாரமொன்று இந்திய அரசுக்கு கிடைத்துள்ளதாக புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சி)

## வரிவிளம்பரம்

### கற்பூரவல்லி

கற்பூரவல்லி நாற்றங்கால் வழங்குகிறோம். 10 பாக்மா வெற்றுப்பைகளைத் தந்து நேரில் பெற்றுக்கொள்ளவும். மிக்க வைத்தி. (ஏ-2798)

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்தும் தனிப்பட்ட முறையிலும் வீடுகளிலும் கற்பிக்கப்படும். தொடர்பு: 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம். யாழ்ப்பாணம். (இ-7141)


## பொதுச்சபை உறுப்பினர்

(புலோலி)

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபை உறுப்பினராக சங்கத்தின் முன்னாள் பொதுமுகாமையாளரான திரு. சா. அருணகிரி தெரிவு செய்யப்பட்டுள்ளார். (61)

## கிழக்கு பல்கலைக்கழகம் மறுஅறிவித்தல்வரை மூடப்படும்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண பல்கலைக்கழகம் முன்னர் அறிவிக்கப்பட்டதுபோன்று இன்று திறக்கப்படமாட்டாது

சகல பீடங்களுக்குமான விரிவுரைகள் மறு அறிவித்தல்வரை பிற்போடப்பட்டுள்ளன. (சி)


## அதிர்ஷ்டலாபச்சீட்டு முடிவுகள்

புலோலி மேற்கு நாவலர் சனசமூக நிலையம் கடந்த தைப்பொங்கலன்று நடத்திய அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின்போது பரிசுபெற்ற இலக்கங்கள் பின்வருமாறு:

1-ம் பரிசு: 1555, 2-ம் பரிசு: 2587

3-ம் பரிசு: 1931

ஐந்து ஆறுதல் பரிசுகள்: 1562, 3326, 1650, 2077, 2205.

இங்ஙனம்
நிலைய நிர்வாகிகள்.

(சி-7146)



## நூலகர் தேவை

ஆங்கில நூல்கள் பகுப்பாக்கம், பட்டியலாக்கம் செய்யக்கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி
25-01-1993

விளம்பர இலக்கம்: சி-7148
மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.

(சி-7148)



## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட முன்னாள் தளபதியும் விடுதலைப் புலிகள் இயக்க மூத்த தளபதியுமான
அமரர்


# சமாதான முயற்சியை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் கேணல் கிட்டு மற்றும் 9 போராளிகளின் வீர மரணம் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையின் விபரம் வருமாறு;

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த தளபதியும், மத்தியகுழு உறுப்பினருமாகிய கேணல் கிட்டு நேற்று முன்தினம் காலை வீரச்சாவை அணைத்துக்கொண்டார். அவருடன் லெப்டினட் கேணல் குட்டிசிறி உட்பட மேலும் ஒன்பது புலி வீரர்கள் வீரச்சாவு எய்தினர். இந்திய கடற்படையிடம் சரணடைய மறுத்த கேணல் கிட்டுவும் ஏனைய போராளிகளும் தம்மைத் தாமே அழித்துக் கொண்டனர்.

இந்திய கடல் எல்லையில் இருந்து 450 மைல்களுக்கு அப்பால் சர்வதேச கடற்பரப்பில் கேணல் கிட்டுவும், மற்றைய போராளிகளும் தமிழீழம் நோக்கி வந்து கொண்டிருந்த கப்பலை இந்திய கடற்படை 13-ம் திகதி புதன் இரவு 10 மணிக்கு வழி மறித்தது. சர்வதேசக் கடலில் இடைமறிப்பது சட்டவிரோதமானது என கேணல் கிட்டு ஆட்சேபம் தெரிவித்தார். இந்த ஆட்சேபத்தை பொருட்படுத்தாது இந்திய கடற்படையினர் புலிகளின் கப்பலைப் பலவந்தமாக இந்தியா நோக்கிக் கொண்டு சென்றனர். இதனையடுத்து புலிகளின் சர்வதேச தலைமையகம் இந்திய அரசின் இந்தச் சட்டவிரோதமான அத்துமீறல் செயலைக் கண்டித்ததுடன் இவ்விவகாரத்தைச் சர்வதேச செய்தி நிறுவனங்கள் மூலம் உலகிற்கும் பகிரங்கப்படுத்தியது ஆனால் இச் சம்பவம் தொடர்பாக இந்திய அரசு எதுவும் கூறாமல் மௌனம் சாதித்தது

இரண்டு நாள் கடல் பயணத்தை அடுத்து 16-ந் திகதி சனிக்கிழமை காலை இந்திய கடல் எல்லைக்குள் புலிகளின் கப்பல் கொண்டுவரப்பட்டது சென்னைத் துறைமுகத்திலிருந்து 12 மைல் தொலைவில் வைத்து புலிகளின் கப்பல் நிறுத்தப்பட்டது. அதன்பின் கேணல் கிட்டுவையும் ஏனைய போராளிகளையும் சரணடையுமாறு இந்திய கடற்படை நிர்ப்பந்தித்தது. இதனைத் தொடர்ந்து கப்பலை சுற்றி

சரணடைய விரும்பாத கேணல் கிட்டுவும் ஏனைய புலி வீரர்களும் கப்பல் ஊழியர்களை வெளியேற்றிவிட்டு கப்பலைத் தகர்த்து தம்மைத் தாமே அழித்து வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

ஐரோப்பிய சமூக நாடுகளின் மத்தியஸ்தத்துடன் தமிழரின் தேசிய பிரச்னைக்கு சமாதான வழி மூலம் தீர்வு காணும் ஒரு சமரசத் திட்டத்துடன் கேணல் கிட்டு தமிழீழம் நோக்கி வந்து கொண்டிருந்தார் இந்த சமாதானத் திட்டம்பற்றி தலைவர் பிரபாகரனுடன் கலந்தாலோசிக்கும் நோக்குடனே அவர் தனது பயணத்தை மேற்கொண்டார். இந்தச் சமரசத் திட்டம் பற்றியும், அதில் ஐரோப்பிய நாடுகளின் பங்கு பற்றியும் எமது சர்வதேச தலைமையகப் பேச்சாளர் பல்வேறு வழிகளில் இந்திய அரசுக்கு தெரிவித்திருந்த போதும் இந்தியா அதற்குச் செவிசாய்க்கவில்லை. தமிழர் பிரச்னைக்கு சமாதான வழி மூலம் தீர்வுகாணும் இந்த சர்வதேச முயற்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கவேண்டாமென தமிழ்நாட்டுத் தலைவர்கள் விடுத்த வேண்டுகோளையும் இந்திய அரசு நிராகரித்தது. சர்வதேசக் கடலில் தமது கப்பலை வழிமறிப்பது சட்டவிரோதமானது என்றும் தம்மைக் கைதுசெய்ய முற்பட்டால் தம்மைத் தாமே அழித்துக் கொள்ளப்போவதாகவும் கேணல் கிட்டு பல தடவைகள் எச்சரிக்கை விடுத்ததையும் இந்திய அரசு பொருட்படுத்தவில்லை

சர்வதேச கடற்பரப்பில் வைத்து புலிகளின் கப்பல் வழிமறிக்கப்பட்டதும், சர்வதேச சமாதான முயற்சியான பயணம் என்பதை அறிந்திருந்தும் இந்திய அரசு மேற்கொண்ட இந்த அநீதியான நடவடிக்கை ஒரு உண்மையை தெளிவுபடுத்துகிறது. அதாவது. புலிகளின் தளபதிகளை அழித்து தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதே இந்தியாவின் நாசகாரத் திட்டமாகும் இந்த நாசகார சதிவேலைக்கு எமது மூத்த தளபதி கிட்டுவும் ஏனைய போராளிகளும் பலியாகியுள்ளனர். இந்த அநீதியான செயலை அமைதியும் சமாதானமும் விரும்பும் சர்வதேச உலகம் கண்டிக்க வேண்டும்.

கேணல் கிட்டு உட்பட பத்து போராளிகளுக்கும்

## இலங்கைத் தமிழர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் நேற்று விடுத்த அதிகாரபூர்வமான அறிக்கையில் இந்தியா மீது கண்டனம் தெரிவித்துள்ளது. இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

"எமது மூத்த தளபதியும், எமது இயக்கத்தின் மத்தியகுழு உறுப்பினரும் சர்வதேச தலைமைச் செயலகத்தின் பொறுப்பாளருமான கேணல் கிட்டுவையும் மற்றும் ஒன்பது போராளிகளையும் மரணப் பொறிக்குள் தள்ளி, அவர்களை அழித்தமைக்கு இந்திய அரசாங்கமே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும். இந்திய அரசின் இந்த வஞ்சகச் செயல், தமிழீழ மக்களின் தேசிய சுதந்திர இயக்கத்திற்கு இழைக்கப்பட்ட இன்னுமொரு மாபெரும் வரலாற்றுத் துரோகமாகும். இது இந்தியாவின் இரத்தக்கறை படிந்த ஆதிக்க அரசியலுக்கு மேலும் இழுக்கைத் தேடிக் கொடுத்துள்ளது. தமிழீழ மக்கள் மீதான இனப் படுகொலைக்கு இந்தியா கைகொடுத்து உதவுகின்றது என்பதை இச்செயல் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது."

"தமிழீழ சுதந்திரப் போராட்டத்தை நசுக்கிவிடும் நோக்கிலும் தெனாசிய பிராந்தியத்தில் தனதுவல்லாதிக்கத்தை நிலைநிறுத்திக்கொள்ளும் இலக்கிலும் இந்திய அரசு நீண்டகாலமாகவே தமிழர் பிரச்னையில் தலையிட்டுவருகிறது நண்பனை நடித்து துரோகங்களை இழைத்து வருகிறது. சிங்கள அரசுடன் கூட்டுச்சேர்ந்து தமிழரின் விடுதலை இயக்கமாகிய புலிகள் இயக்கத்தை ஒழித்துக்கட்ட முயன்று வருகிறது

தமிழீழ மக்களின் தேசிய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் அரசியல் தீர்வுக்கும் முட்டுக்கட்டையாக இருந்து வருகிறது நாம் ஒரு ஒடுக்கப்பட்ட மக்கள் இனம் என்பதையும் இன அழிவுக்கு எதிராக நீதியின் அடிப்படையில் உரிமைப்போர் நடத்தி வருகிறோம் என்பதையும் அலட்சியம் செய்து வரும் இந்திய அரசு எமது மக்களின் சாவிலும் அழிவிலும் தனது பூகோள ஆதிக்க அரசியலை முன்னெடுக்க முயல்கிறது சிறிய தேசிய இனமாக தனித்து நின்று போராடி உலக சமுதாயத்தின் அனுதாபம் கேட்டு நாம் எழுப்பும் உரிமைக்குரலையும் இந்தியா நசுக்கிவிட முயல்கிறது தமிழீழ கடற்பரப்பை முற்றுகையிட்டு தமிழ்நாட்டுடன் எமது தொடர்புகளை துண்டித்து எமது கடற்போக்குவரத்தை தடைசெய்து, எம்மை பலவீனப்படுத்தி, எமது எதிரியான சிங்கள அரசு எமது போராட்டத்தை முறியடித்து எமது மக்களை கொன்றழிப்பதற்கு இந்தியா துணைபோகிறது.

இந்தியாவின் சதி வலைக்குள் சிக்கியதால் எமது தளபதிகள் பலர் உயிரிழக்க நேர்ந்த மிகவும் கொடுமையான நிகழ்வுகளை எமது மக்கள் அறிவார்கள். இந்தியாவிடம் தர்மம் கேட்ட திலீபன் இந்திய மத்தியத்துவத்தை நம்பிய புலேந்திரன், குமரப்பா. இந்தியாவிலிருந்து சமாதான தூதுவனாக வந்த ஜொனி ஆகியோரின் சோகக் கதைகளை எமது மக்கள் அறிவார்கள். இந்தியாவின் இந்தக் கொலைப் பட்டியலில் இப்பொழுது தளபதி கிட்டுவும் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஐரோப்பிய நாடுகளின் சமரச யோசனைகள் அடங்கிய திட்டத்துடன், சமாதான தூதுவனாகவே தளபதி கிட்டு

## இராசி பலன்

18-01-1993
திங்கட்கிழமை
(தமிழுக்கு தை 05)

ஏகாதசி மு. இ. 10-19 வரை. ஆனாலும் மு இ. 10-04 வரை, இராகுகாலம் காலை 8-05 முதல் 9-35 வரை. சுபநேரம் நண்பகல் 12-35 முதல் 2-05 வரை. ஏகாதசி விரதம்.

**மேடம்:** தொழில் வெறுப்பு, தைரிய குறைவு. வயிற்றுவலி

**இடபம்:** புத்திமியாக பெருமை, பொருள் வரவு. காரிய சித்தி,

**மிதுனம்:** இதிகாச ஈடுபாடு, மனமகிழ்ச்சி, நல்ல தகவல்

**கடகம்:** தாய்க்கு ரோகம், குடும்ப கவலை, மனஉளைச்சல்.

**சிங்கம்:** கைப் பொருள் இழப்பு, கடும்சினம், பயண அலைச்சல்

**கன்னி:** காரிய வெற்றி, குடும்ப சிறப்பு, விருந்துண்ணல்

**துலாம்:** கடமை தவறுதல், மறைமுக துன்பம், இடம் பெயர்வு.

**விருச்சிகம்:** இனசன மகிழ்ச்சி தெய்வீக செலவு. பெண் உதவி.

**தனுசு:** உறவினர் விரோதம், தனிமையடைதல், விரக்தி.

**மகரம்:** காரிய வெற்றி, பணவரவு, வீட்டில் சுபகாரியம்.

**கும்பம்:** தொழில் கீர்த்தி, அதிகாரிகள் உதவி, குடும்ப

3 ம் பரிசு: 1931
ஐந்து ஆறுதல் பரிசுகள்: 1562, 3326, 1650, 2077, 2205.

(சி-7146)

இங்ஙனம்
நிலைய நிர்வாகிகள்.

# நூலகர் தேவை

ஆங்கில நூல்கள் பகுப்பாக்கம், பட்டியலாக்கம்
செய்யக்கூடியவர்கள் மட்டும்
விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி
**25-01-1993**

**விளம்பர இலக்கம்: சி-7148**
**மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.**

(சி-7148)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட முன்னாள் தளபதியும் விடுதலைப்
புலிகள் இயக்க மூத்த தளபதியுமான
அமரர்

## ச. கிருஷ்ணகுமாரும் (கிட்டு)

ஒன்பது வீர வேங்கைகளினதும் மரணம் குறித்து
எங்கள் கண்ணீர் அஞ்சலியை செலுத்துகின்றோம்

நிர்வாகம்
வட பிராந்திய வர்த்தக ஊழியர் சங்கம்
தலைமை செயலகம்
235, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-715)

# வீர வணக்கம்

## கடற்புலி லெப். அமுதன்
## (மரிநயாயகம் யான்சன்)

நாவாந்துறை சென்மேரிஸ் சனசமூக நிலையத்தின தும் சென்மேரிஸ் விளையாட்டுக்கழகத்தினதும் தலைவரும் யாழ். மாநகரசபைஊழியருமான திரு. ச. மரிநாயகம் அலோசியஸ் அவர்களின்
வீரப்புதல்வன்

கடற்புலி லெப். அமுதன் (யான்சன்)
அவர்கள் 16-1-93 சென்னை சம்பவத்தில் தளபதி கிட்டு உட்பட ஒன்பது போராளிகளுடன் வீர மரணத்தைதழுவிக் கொண்டார் என்பதை உற்றார் உறவினர், நண்பர்கள் சகலருக்கும் அறியத்தருகிறேன்.

தகவல்:
தொ. மரியதாஸ் (மணி)
மாமனார்
நாவாந்துறை

(சி-7149)

ழீழம் நோக்கி வந்து கொண்டிருந்த கப்பலை இந்திய கடற்படை 13-ம் திகதி புதன் இரவு 10 மணிக்கு வழி மறித்தது. சர்வதேசக் கடலில் இடைமறிப்பது சட்டவிரோதமானது என கேர்ணல் கிட்டு ஆட்சேபம் தெரிவித்தார். இந்த ஆட்சேபத்தை பொருட்படுத்தாது இந்திய கடற்படையினர் புலிகளின் கப்பலைப் பலவந்தமாக இந்தியா நோக்கிக் கொண்டு சென்றனர். இதனையடுத்து புலிகளின் சர்வதேச தலைமையகம் இந்திய அரசின் இந்தச் சட்டவிரோதமான அத்துமீறல் செயலைக் கண்டித்ததுடன் இவ்விவகாரத்தைச் சர்வதேச செய்தி நிறுவனங்கள் மூலம் உலகிற்கும் பகிரங்கப்படுத்தியது ஆனால் இச்சம்பவம் தொடர்பாக இந்திய அரசு எதுவும் கூறாமல் மௌனம் சாதித்தது

இரண்டு நாள் கடல் பயணத்தை அடுத்து 16-ந் திகதி சனிக்கிழமை காலை இந்திய கடல் எல்லைக்குள் புலிகளின் கப்பல் கொண்டுவரப்பட்டது சென்னைத் துறைமுகத்திலிருந்து 12 மைல் தொலைவில் வைத்து புலிகளின் கப்பல் நிறுத்தப்பட்டது. அதன்பின் கேணல் கிட்டுவையும் ஏனைய போராளிகளையும் சரணடையுமாறு இந்திய கடற்படை நிர்ப்பந்தித்தது. இதனைத் தொடர்ந்து கப்பலை சுற்றி வளைத்து. இந்திய கடற்படையினர் புலிகளைக் கைது செய்யும் நடவடிக்கையில் இறங்க முற்பட்டனர். அப்பொழுது இந்திய கடற்படையினரிடம் சர்வதேச முயற்சிக்கு முட்டுக் கட்டையாக இருக்கவேண்டாமென தமிழ்நாட்டுத் தலைவர்கள் விடுத்த வேண்டுகோளையும் இந்திய அரசு நிராகரித்தது. சர்வதேசக் கடலில் தமது கப்பலை வழிமறிப்பது சட்டவிரோதமானது என்றும் தம்மைக் கைதுசெய்ய முற்பட்டால் தம்மைத் தாமே அழித்துக் கொள்ளப்போவதாகவும் கேணல் கிட்டு பல தடவைகள் எச்சரிக்கை விடுத்ததையும் இந்திய அரசு பொருட்படுத்தவில்லை

சர்வதேச கடற்பரப்பில் வைத்து புலிகளின் கப்பல் வழிமறிக்கப்பட்டதும், சர்வதேச சமாதான முயற்சிக்கான பயணம் என்பதை அறிந்திருந்தும் இந்திய அரசு மேற்கொண்ட இந்த அநீதியான நடவடிக்கை ஒரு உண்மையை தெளிவுபடுத்துகிறது. அதாவது. புலிகளின் தளபதிகளை அழித்து தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதே இந்தியாவின் நாசகாரத் திட்டமாகும் இந்த நாசகார சதிவேலைக்கு எமது மூத்த தளபதி கிட்டுவும் ஏனைய போராளிகளும் பலியாகியுள்ளனர். இந்த அநீதியான செயலை அமைதியும் சமாதானமும் விரும்பும் சர்வதேச உலகம் கண்டிக்க வேண்டும்.

கேணல் கிட்டு உட்பட பத்து போராளிகளுக்கும் விடுதலைப்புலிகள் இயக்கம் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்வதாகவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வஞ்சக இந்தியா வலையினை விரித்ததோ?

செஞ்சமர் ஆட்டத்தில்
தோல்வியைக் கண்ட
வஞ்சக இந்தியா
வலையினை விரித்ததோ?
நெஞ்சினில் துணிவின்றி
நஞ்சினைத் தாங்கியோர்
அஞ்சிடா வேங்கையினை
அவலமாய்க் கொன்றனரோ?

குப்பி கடித்தாலும்
குலையாமல் இருந்திருப்போம்
தப்பாகச் செல்லடித்துக்
கொன்றாலும் பொறுத்திருப்போம்
துப்பாக்கிச் சமரொன்றில்
மடிந்தாலும் நாம் தளரோம்
எப்படி நாம் மறப்போம்
இப்பெரும் . துரோகமதை!

இந்தியா வென்னும் ஓர்நாடு
இருக்கிறதா ......எங்கே?
காந்தியார் காட்டிய
காருண்ய வழியாஇது?
சாந்திதரும் பெருமதங்கள்
செழித்த நற் பூமியெங்கே?
பூந்தளிராய் பதின்மரினை
பொசுக்கியது யார் கடலில்

— கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன்

**18-01-1993**
**திங்கட்கிழமை**
**(தமிழுக்கு தை 05)**

ஏகாதசி மு. இ. 10-19 வரை. ஆனாலும் மு இ. 10-04 வரை. இராகுகாலம் காலை 8-05 முதல் 9-35 வரை. சுபநேரம் நண்பகல் 12-35 முதல் 2-05 வரை. ஏகாதசி விரதம்.

**மேடம்:** தொழில் வெறுப்பு. தைரிய குறைவு. வயிற்றுவலி

**இடபம்:** புத்தி வியாகூல பெருமை, பொருள் வரவு. காரிய சித்தி.

**மிதுனம்:** இதிகாச ஈடுபாடு. மனமகிழ்ச்சி. நல்ல தகவல்

**கடகம்:** தாய்க்கு ரோகம். குடும்ப கவலை. மனஉளைச்சல்.

**சிங்கம்:** கைப் பொருள் இழப்பு. கடும்சினம், பயண அலைச்சல்

**கன்னி:** காரிய வெற்றி. குடும்ப சிறப்பு. விருந்துண்ணல்

**துலாம்:** கடமை தவறுதல். மறைமுக துன்பம், இடம் பெயர்வு.

**விருச்சிகம்:** இனசன மகிழ்ச்சி தெய்வீக செலவு. பெண் உதவி.

**தனுசு:** உறவினர் விரோதம், தனிமை வடைதல், விரக்தி.

**மகரம்:** காரிய வெற்றி, பணவரவு, வீட்டில் சுபகாரியம்.

**கும்பம்:** தொழில் கீர்த்தி, அதிகாரிகள் உதவி, குடும்ப சுகம்.

**மீனம்:** தர்ம சங்கடம், தொழில்பகை, மனவேதனை.

- ஜோஸ்யர்

## இந்தியாவின் பிடியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி

கையில்: சர்வதேசக்கடலில் கிட்டு சமாதான நோக்கில் பயணம் செய்தபோது இந்திய கடற்படையால் வழிமறிக்கப்பட்டு இந்தியாவின் கடல் எல்லைக்குள் பலவந்தமாகக் கொண்டு வரப்பட்டாரென கூறப்படுவதாலும் சென்னைத் துறைமுகத்தை நோக்கி கிட்டு பொலிசாரால் அழைத்து வரப்பட்டாரென தமிழக பொலிசாரே முதலில் கூறியிருப்பதாலும் இந்தியா மீது கடும் குற்றச்சாட்டு எழலாம்.

கிட்டு மற்றும் ஏனைய புலிகளின் இறப்பு இந்திய கரையில் நடந்திருக்குமா அல்லது கப்பலில் நடந்திருக்குமா என்பது சந்தேகத்திற்கிடமாயிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மிகவும் அறிவார்ந்தவர் என கருதப்படும் கிட்டு மேற்கத்தைய நாடுகளுக்கு மிகவும் நெருக்கமானவர் என்பதோடு புலிகள் முன்வைக்கும் சமாதானத் திட்டத்தை வடிவமைத்துக் கொண்டிருந்தவர் என்றும் அவரது மறைவு புலிகளுக்கு ஒரு பாரிய இழப்பே என்று சர்வதேச விமர்சகர்கள் கூறியிருப்பதாகவும் 'வெரித்தாஸ்' தெரிவித்தது. (சி)

தனது பூகோள ஆதிக்க அரசியலை முன்னெடுக்க முயல்கிறது சிறிய தேசிய இனமாக தனித்து நின்று போராடி உலக சமுதாயத்தின் அனுதாபம் கேட்டு நாம் எழுப்பும் உரிமைக் குரலையும் இந்தியா நசுக்கிவிட முயல்கிறது தமிழீழ கடற்பரப்பை முற்றுகையிட்டு தமிழ்நாட்டுடன் எமது தொடர்புகளை துண்டித்து எமது கடற்போக்குவரத்தை தடைசெய்து, எம்மை பலவீனப்படுத்தி, எமது எதிரியான சிங்கள அரசு எமது போராட்டத்தை முறியடித்து எமது மக்களை கொன்றழிப்பதற்கு இந்தியா துணை போகிறது.

இந்தியாவின் சதி வலைக்குள் சிக்கியதால் எமது தளபதிகள் பலர் உயிரிழக்க நேர்ந்த மிகவும் கொடுமையான நிகழ்வுகளை எமது மக்கள் அறிவார்கள். இந்தியாவிடம் தர்மம் கேட்ட திலீபன் இந்திய மத்தியத்துவத்தை நம்பிய புலேந்திரன், குமரப்பா. இந்தியாவிலிருந்து சமாதான தூதுவனாக வந்த ஜொனி ஆகியோரின் சோகக் கதைகளை எமது மக்கள் அறிவார்கள். இந்தியாவின் இந்தக் கொலைப் பட்டியலில் இப்பொழுது தளபதி கிட்டுவும் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஐரோப்பிய நாடுகளின் சமரச யோசனைகள் அடங்கியதிட்டத்துடன், சமாதான தூதுவனாகவே தளபதி கிட்டு தமிழீழம் நோக்கிய கடற் பயணத்தை மேற்கொண்டார். வேறெந்தப் போக்குவரத்து பாதைகளும் இல்லாததால், சகலரும் சுதந்திரமாக நடமாடும் சர்வதேச கடல் மார்க்கமாக அவர் தமது தாயகம் நோக்கிய பயணத்தை தொடர்ந்தார்.

இந்திய கடற்படை கிட்டுவின் கப்பலை இடைமறித்த போது கிட்டுவின் சமாதான முயற்சிபற்றி இந்திய அரசிடம் எடுத்துக் கூறப்பட்டது. ஆனால் இந்தியஅரசு ஐரோப்பிய சமாதான முயற்சியை விரும்பவில்லை. மேற்குலக மத்தியஸ்துவம் மூலம் தமிழர் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு ஏற்படுவதை விரும்பவில்லை அத்துடன் தனது கடலாதிக்கப் பொறிக்குள் சிக்கிவிட்ட புலிகளின் முக்கிய தளபதியை ஒழித்துவிடவே இந்தியா விரும்பியது இதனால் எமது தளபதி கிட்டு இந்தியாவின் நயவஞ்சகச் சூழ்ச்சிக்குப் பலியாக நேர்ந்தது.

தளபதி கிட்டுவும், ஏனைய புலி வீரர்களும் இந்தியாவின் படை பலத்திற்கும் பயமுறுத்தலுக்கும் தலைகுனியவில்லை. எமது இயக்கத்தின் வீர மரபுக்கு ஒப்ப தம்மை தாமே அழித்து தமிழினத்தின் தன்மானத்தை நிலைநிறுத்தினர்.

இந்த தியாக வரலாற்று நிகழ்வு இந்திய அரசின் அரக்கத்தனத்தை உலகத்திற்கு அம்பலப்படுத்துவதாக அமைந்துள்ளது. (சு-சி)

தில்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

### ★ ஈழ விடுதலைப் போராட்டத்தில்

# வரலாற்று சிறப்புமிக்க பல தாக்குதல்களில்

# பங்குபற்றி தலைமை தாங்கியவர் 'தளபதி கிட்டு'

(யாழ்ப்பாணம்)

வங்கக் கடலில் இந்தியப் படையினர் சர்வதேச எல்லையில் வழிமறித்து சரணடையப் பணித்தபோது அதற்கு மறுப்புத் தெரிவித்து தன்னுடனும் ஏனைய 9 போராளிகளுடனும் சேர்த்து தாம் வந்த கப்பலை தகர்த்து வீரச்சாவு எய்தியவர் தளபதி திரு. கிட்டு கிருஷ்ணகுமார்.

1960 ம் ஆண்டு ஜனவரி 2-ம் திகதி வல்வெட்டித்துறையில் பிறந்த சதாசிவம் கிருஷ்ணகுமார் எனப்படும் திரு. கிட்டு பருத்தித்துறை வேலாயுதம் வித்தியாசாலையில் கல்வி கற்றவர். 1979-ம் ஆண்டு விடுதலைப் புலிகளுடன் தன்னை இணைத்த திரு. கிட்டு தமிழீழ விடுதலை போராட்டத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க பல தாக்குதல்களில் கலந்து கொண்டவர்.

1983 மே 18 ம் திகதி கந்தர்மடம் வாக்குச்சாவடி மீதான லெப். சீலன் தலைமையிலான தாக்குதல், யூலை 23-ம் திகதி லெப் செல்லக்கிளி தலைமையிலான தாக்குதல், திருநெல்வேலி கண்ணிவெடித் தாக்குதலில் முக்கிய பங்கு வகித்த திரு கிட்டு. 1985 ம் ஆண்டு ஜனவரி 9-ம் திகதி கட்டன் [பண்டிதர்] வீரச்சாவைதழுவிய பின் யாழ் மாவட்ட தளபதியாக பொறுப்பேற்றார்.

திரு கிட்டு 1985 ஏப்ரல் 10 ம் திகதி இடம்பெற்ற யாழ் பொலிஸ் நிலையம் மீதான தாக்குதலுக்கு தலைமை தாங்கினார். இதையடுத்து தொடர்ந்து இரு நாட்கள் யாழ் குடாநாடு முதன்முறையாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது.

திரு. கிட்டு தளபதியாகப் பொறுப்பேற்று நடத்திய தீவிர தாக்குதலையடுத்து 1985 ம் ஆண்டு மே மாதத்தின் பின் இராணுவரோந்து நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டன. இராணுவத்தினர் தமது முற்றுகையை கைவிட்டு பின்வாங்கி ஓடவைத்த முதல் வெற்றிகரத் தாக்குதல் தளபதி கிட்டுவால் நடத்தப்பட்டது.

1985 டிசம்பர் 21 ம் திகதி இந்த வெற்றிகரத் தாக்குதல் நடத்தப்பட்டது. சுதுமலையில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட பிரதான முகாமை நான்கு ஹெலிகொப்டரில் வந்து தரையிறங்கி முற்றுகையிட முயன்ற இராணுவத்தினரை திரு. கிட்டு தலைமையிலான புலிகள் விரட்டியடித்தனர்.

1986 ல் யாழ் தொலைத்தொடர்பு நிலையம் மீதான தாக்குதலை தளபதி கிட்டு தலைமையேற்று நடத்தினர். 1987 ல் தேசவிரோதிகளின் குண்டு வீச்சினால் ஒரு காலை இழந்தசமயம் சிகிச்சைக்காக இந்தியா சென்றிருந்தபோது தமிழக பொலிசாரினால் சென்னை மத்திய சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டார். சிறைச்சாலையில் இருந்த சமயம் தன்னையும் சகபோராளிகளையும் விடுதலை செய்ய வேண்டும் அல்லது தமிழீழ மண்ணில் சகதோழர்களிடம் ஒப்படைக்க வேண்டுமெனக் கோரி சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

உண்ணாவிரதத்தை ஆரம்பித்தவுடன் தமிழீழத்திற்கு கொண்டுவரப்பட்டு விடுதலை செய்யப்பட்டார் பின்னர் 1989 ம் ஆண்டின் இறுதியில் லண்டன் சென்று விடுதலைப் புலிகளின் 'சர்வதேச விவகாரங்களுக்கு' பொறுப்பாக செயற்பட்டு வந்தார்.

1991 ம் ஆண்டில் லண்டனிலிருந்து பிரிட்டிஷ் அரசால் வெளியேற்றப்பட்ட திரு. கிட்டு தொடர்ந்து சர்வதேச விவகாரங்களுக்கு பொறுப்பாக செயற்பட்டு வந்தார். தமிழீழத்தில் இந்தியப்படைகள் செய்த அட்டூழியத்தை நூல்கள் மூலம் வெளிக்கொணர்ந்து இந்திய இராணுவத்தின் அடாவடித்தனங்களை வெளி உலகிற்கு அம்பலப்படுத்திய பணியினை திரு கிட்டு செய்தது நினைவுகூரத்தக்கது.

இந்த நிலையில் இந்திய அரசின் சதிச் செயலுக்கு இலக்கான விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகளில் இவரும் ஒருவராவார். (ஓ)

---

### ★ வடக்கில் இராணுவம்

# பாரிய தாக்குதலை நடத்தினால் சர்வதேச தலையீடு ஏற்படும்

(கொழும்பு)

வடபகுதியில் இராணுவம் பாரிய தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளுமானால் சர்வதேச தலையீடு மூலம் கணக்கிடமுடியாத விளைவுகள் ஏற்படும் அபாயம் இருப்பதாக முன்னாள் 'சற்றடே றிவியூ' ஆசிரியர் திரு. காமினி நவரத்ன அரசை கடுமையாக எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்: 1987ல் வடமராட்சியில் இடம் பெற்றதுபோன்றதொரு தாக்குதல் யாழ். குடாவில் ஏற்பட்டால் சர்வதேச தலையீடு ஏற்பட்டு அதன் மூலம் கணக்கிடமுடியாத விளைவுகள் ஏற்படலாம். மேலும் யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றலாம். ஆனால் எவ்வளவு காலத்திற்கு அவர்களால் எப்படி அதனை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கமுடியும் என்பதே தற்போதைய கேள்வி.

எனவே உடனடியாக யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி விரைவாக சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். (சி)

### விவாதம் தொடர்பாக

# சிறிமாவின் கடிதம்

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா இலங்கையின் பொருளாதாரம் பற்றி பகிரங்க மேடையில் விவாதிக்க வருமாறு விடுத்த அழைப்புக்கு நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இந்த விவாதத்தில் மனித உரிமைகள் மீறல், கல்வி, அரச கம்பனிகள் விற்கப்படமை, பல்கலைக்கழகம் மூடப்பட்டமை ஆகிய விடயங்கள் விவாதத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்றும் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார். (சு)

### பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

அகில உலக வெபர் யாழ். பிராந்தியத்தினரால் அரச சார்பற்ற நிறுவனங்கள் உத்தியோகத்தர்களுக்கு இன்று முதல் மூன்று நாட்கள் நடைபெறவிருந்த வேலைப்பட்டறை பிற்போடப்பட்டுள்ளது என திட்டப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

### 8 வருடத்தின் பின்

## நீதிமன்றம் திறப்பு

(கொழும்பு)

கடந்த எட்டுவருடங்களாக மூடப்பட்டிருந்த மூதூர் நீதிமன்றம் எதிர்வரும் 23ம் திகதி மீண்டும் திறந்து வைக்கப்

### இந்திய அமைச்சர்கள் அனைவரும்

# ஒட்டு மொத்தமாக ராஜினாமா

## புதிய அமைச்சரவை தெரிவாகும்

(புதுடில்லி)

இந்திய மத்திய அமைச்சரவையில் பிரதமர் திரு பி. வி. நரசிம்மராவ் தலைமையி கள் பதவி விலகல் கடிதங்களை பிரதமரிடம் சமர்ப்பிக்க வேண்டுமென கேட்டிருந்தார். பின்னர் அங்கிருந்த பாக எதிர்க்கட்சியான பி. ஜே. பியின் அச்சுறுத்தலை சமாளிக்கவும் காங்கிரஸ் கட்சிக்குள் பிரதம

### க. பொ. த. (உ)

## பரீட்சை முடிவுகள் குமாரியில் வரும்

(திருநெல்வேலி)

3 ம் பரிசு: 1931
ஐந்து ஆறுதல் பரிசுகள்: 1562, 3326, 1650, 2077, 2205.

இங்ஙனம்
(சி-7146) நிலைய நிர்வாகிகள்.

## நூலகர் தேவை

ஆங்கில நூல்கள் பகுப்பாக்கம், பட்டியலாக்கம் செய்யக்கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி
25-01-1993

விளம்பர இலக்கம்: சி-7148
மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.

(சி-7148)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட முன்னாள் தளபதியும் விடுதலைப் புலிகள் இயக்க மூத்த தளபதியுமான
அமரர்
ச. கிருஷ்ணகுமாரும் (கிட்டு)
ஒன்பது வீர வேங்கைகளினதும் மரணம் குறித்து எங்கள் கண்ணீர் அஞ்சலியை செலுத்துகின்றோம்.

நிர்வாகம்
வட பிராந்திய வர்த்தக ஊழியர் சங்கம்
தலைமை செயலகம்
235, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (சி-715)

## வீர வணக்கம்

### கடற்புலி லெப். அமுதன்
### (மரிநயாயகம் யான்சன்)

நாவாந்துறை சென்மேரிஸ் சனசமூக நிலையத்தினதும் சென்மேரீஸ் விளையாட்டுக்கழகத்தினதும் தலைவரும் யாழ். மாநகரசபைஊழியருமான திரு. ச. மரியநாயகம் அலோசியஸ் அவர்களின் வீரப்புதல்வன்

கடற்புலி லெப். அமுதன் (யான்சன்)

அவர்கள் 16-1-93 சென்னை சம்பவத்தில் தளபதி கிட்டு உட்பட ஒன்பது போராளிகளுடன் வீர மரணத்தைத்தழுவிக் கொண்டார் என்பதை உற்றார் உறவினர், நண்பர்கள் சகலருக்கும் அறியத்தருகிறேன்.

தகவல்:
தொ. மரியதாஸ் (மணி)
மாமனூர்
நாவாந்துறை

(சி-7149)

...ழம் நோக்கி வந்து கொண்டிருந்த கப்பலை இந்திய கடற்படை 13-ம் திகதி புதன் இரவு 10 மணிக்கு வழி மறித்தது. சர்வதேசக் கடலில் இடைமறிப்பது சட்டவிரோதமானது என கேர்ணல் கிட்டு ஆட்சேபம் தெரிவித்தார். இந்த ஆட்சேபத்தை பொருட்படுத்தாது இந்திய கடற்படையினர் புலிகளின் கப்பலைப் பலவந்தமாக இந்தியா நோக்கிக் கொண்டு சென்றனர். இதனையடுத்து புலிகளின் சர்வதேச தலைமையகம் இந்திய அரசின் இந்தச் சட்டவிரோதமான அத்துமீறல் செயலைக் கண்டித்ததுடன் இவ்விவகாரத்தைச் சர்வதேச செய்தி நிறுவனங்கள் மூலம் உலகிற்கும் பகிரங்கப்படுத்தியது ஆனால் இச்சம்பவம் தொடர்பாக இந்திய அரசு எதுவும் கூறாமல் மௌனம் சாதித்தது

இரண்டு நாள் கடல் பயணத்தை அடுத்து 16-ந் திகதி சனிக்கிழமை காலை இந்திய கடல் எல்லைக்குள் புலிகளின் கப்பல் கொண்டுவரப்பட்டது சென்னைத் துறைமுகத்திலிருந்து 12 மைல் தொலைவில் வைத்து புலிகளின் கப்பல் நிறுத்தப்பட்டது. அதன்பின் கேணல் கிட்டுவையும் ஏனைய போராளிகளையும் சரணடையுமாறு இந்திய கடற்படை நிர்ப்பந்தித்தது. இதனைத் தொடர்ந்து கப்பலை சுற்றிவளைத்து. இந்திய கடற்படையினர் புலிகளைக் கைது செய்யும் நடவடிக்கையில் இறங்க முற்பட்டனர். அப்பொழுது இந்திய கடற்படையினரிடம் கைதியாக இருக்கவேண்டாமென தமிழ்நாட்டுத் தலைவர்கள் விடுத்த வேண்டுகோளையும் இந்திய அரசு நிராகரித்தது. சர்வதேசக் கடலில் தமது கப்பலை வழிமறிப்பது சட்டவிரோதமானது என்றும் தம்மைக் கைதுசெய்ய முற்பட்டால் தம்மைத் தாமே அழித்துக் கொள்ளப்போவதாகவும் கேணல் கிட்டு பல தடவைகள் எச்சரிக்கை விடுத்ததையும் இந்திய அரசு பொருட்படுத்தவில்லை

சர்வதேச கடற்பரப்பில் வைத்து புலிகளின் கப்பல் வழிமறிக்கப்பட்டதும், சர்வதேச சமாதான முயற்சிக்கான பயணம் என்பதை அறிந்திருந்தும் இந்திய அரசு மேற்கொண்ட இந்த அநீதியான நடவடிக்கை ஒரு உண்மையை தெளிவுபடுத்துகிறது. அதாவது. புலிகளின் தளபதிகளை அழித்து தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதே இந்தியாவின் நாசகாரத் திட்டமாகும் இந்த நாசகார சதிவேலைக்கு எமது மூத்த தளபதி கிட்டுவும் ஏனைய போராளிகளும் பலியாகியுள்ளனர். இந்த அநீதியான செயலை அமைதியும் சமாதானமும் விரும்பும் சர்வதேச உலகம் கண்டிக்க வேண்டும்.

கேணல் கிட்டு உட்பட பத்து போராளிகளுக்கும் விடுதலைப்புலிகள் இயக்கம் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்வதாகவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வஞ்சக இந்தியா வலையினை விரித்ததோ?

செஞ்சமர் ஆட்டத்தில்
தோல்வியைக் கண்ட
வஞ்சக இந்தியா
வலையினை விரித்ததோ?
நெஞ்சினில் துணிவின்றி
நஞ்சினைத் தாங்கியோர்
அஞ்சிடா வேங்கையினை
அவலமாய்க் கொன்றனரோ?

குப்பி கடித்தாலும்
குலையாமல் இருந்திருப்போம்
தப்பாகச் செல்லடித்துக்
கொன்றாலும் பொறுத்திருப்போம்
துப்பாக்கிச் சமரொன்றில்
மடிந்தாலும் நாம் தளரோம்
எப்படி நாம் மறப்போம்
இப்பெரும் துரோகமதை!

இந்தியா வென்னும் ஓர்நாடு
இருக்கிறதா ......எங்கே?
காந்தியார் காட்டிய
காருண்ய வழியாஇது?
சாந்திதரும் பெருமதங்கள்
செழித்த நற் பூமியெங்கே?
பூந்தளிராய் பதின்மரினை
பொசுக்கியது யார் கடலில்

— கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன்

### திங்கட்கிழமை
(தமிழுக்கு தை 05)

ஏகாதசி மு. இ. 10-19 வரை. அனுஷம் மு இ. 10-04 வரை. இராகுகாலம் காலை 8-05 முதல் 9-35 வரை. சுபநேரம் நண்பகல் 12-35 முதல் 2-05 வரை. ஏகாதசி விரதம்.

மேடம்: தொழில் வெறுப்பு. தைரிய குறைவு. வயிற்றுவலி

இடபம்: புத்திமியால் பெருமை, பொருள் வரவு. காரிய சித்தி.

மிதுனம்: இதிகாச ஈடுபாடு. மனமகிழ்ச்சி. நல்ல தகவல்

கடகம்: தாய்க்கு ரோகம். குடும்ப கவலை. மனஉளைச்சல்.

சிங்கம்: கைப்பொருள் இழப்பு. கடுஞ்சினம். பயண அலைச்சல்

கன்னி: காரிய வெற்றி. குடும்ப சிறப்பு. விருந்துண்ணல்

துலாம்: கடமை தவறுதல். மறைமுக துன்பம். இடம் பெயர்வு.

விருச்சிகம்: இனசன மகிழ்ச்சி தெய்வீக செலவு. பெண் உதவி.

தனுசு: உறவினர் விரோதம். தனிமையடைதல். விரக்தி.

மகரம்: காரிய வெற்றி. பணவரவு. வீட்டில் சுபகாரியம்.

கும்பம்: தொழில் கீர்த்தி. அதிகாரிகள் உதவி. குடும்ப சுகம்.

மீனம்: தர்மசங்கடம். தொழில்பகை. மனவேதனை.

- ஜோஸ்யர்

### இந்தியாவின் பிடியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கையில்: சர்வதேசக்கடலில் கிட்டு சமாதான நோக்கில் பயணம் செய்தபோது இந்திய கடற்படையால் வழிமறிக்கப்பட்டு இந்தியாவின் கடல் எல்லைக்குள் பலவந்தமாகக் கொண்டு வரப்பட்டாரென கூறப்படுவதாலும் சென்னைத் துறைமுகத்தை நோக்கி கிட்டு பொலிசாரால் அழைத்து வரப்பட்டாரென தமிழக பொலிசாரே முதலில் கூறியிருப்பதாலும் இந்தியா மீது கடும் குற்றச்சாட்டு எழலாம்.

கிட்டு மற்றும் ஏனைய புலிகளின் இறப்பு இந்திய கரையில் நடந்திருக்குமா அல்லது கப்பலில் நடந்திருக்குமா என்பது சந்தேகத்திற்கிடமாயிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மிகவும் அறிவார்ந்தவர் என கருதப்படும் கிட்டு மேற்கத்தைய நாடுகளுக்கு மிகவும் நெருக்கமானவர் என்பதோடு புலிகள் முன்வைக்கும் சமாதானத் திட்டத்தை வடிவமைத்துக் கொண்டிருந்தவர் என்றும் அவரது மறைவு புலிகளுக்கு ஒரு பாரிய இழப்பே என்று சர்வதேச விமர்சகர்கள் கூறியிருப்பதாகவும் 'வெரித்தாஸ்' தெரிவித்தது. (சி)

...யலை முன்னெடுக்க முயல்கிறது சிறிய தேசிய இனமாக தனித்து நின்று போராடி உலக சமுதாயத்தின் அனுதாபம் கேட்டு நாம் எழுப்பும் உரிமைக்குரலையும் இந்தியா நசுக்கிவிட முயல்கிறது தமிழீழ கடற்பரப்பை முற்றுகையிட்டு தமிழ்நாட்டுடன் எமது தொடர்புகளை துண்டித்து எமது கடற்போக்குவரத்தை தடைசெய்து, எம்மை பலவீனப்படுத்தி, எமது எதிரியான சிங்கள அரசு எமது போராட்டத்தை முறியடித்து எமது மக்களை கொன்றழிப்பதற்கு இந்தியா துணைபோகிறது.

இந்தியாவின் சதி வலைக்குள் சிக்கியதால் எமது தளபதிகள் பலர் உயிரிழக்க நேர்ந்த மிகவும் கொடுமையான நிகழ்வுகளை எமது மக்கள் அறிவார்கள். இந்தியாவிடம் தர்மம் கேட்ட திலீபன் இந்திய மத்தியத்துவத்தை நம்பிய புலேந்திரன், குமரப்பா. இந்தியாவிலிருந்து சமாதான தூதுவனாக வந்த ஜொனி ஆகியோரின் சோகக் கதைகளை எமது மக்கள் அறிவார்கள். இந்தியாவின் இந்தக் கொலைப் பட்டியலில் இப்பொழுது தளபதி கிட்டுவும் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஐரோப்பிய நாடுகளின் சமரச யோசனைகள் அடங்கிய திட்டத்துடன், சமாதான தூதுவனாகவே தளபதி கிட்டு தமிழீழம் நோக்கிய கடற்பயணத்தை மேற்கொண்டார். வேறெந்தப் போக்குவரத்து பாதைகளும் இல்லாததால், சகலரும் சுதந்திரமாக நடமாடும் சர்வதேச கடல் மார்க்கமாக அவர் தமது தாயகம் நோக்கிய பயணத்தை தொடர்ந்தார்.

இந்திய கடற்படை கிட்டுவின் கப்பலை இடைமறித்த போது கிட்டுவின் சமாதான முயற்சிபற்றி இந்திய அரசிடம் எடுத்துக் கூறப்பட்டது. ஆனால் இந்தியஅரசு ஐரோப்பிய சமாதான முயற்சியை விரும்பவில்லை. மேற்குலக மத்தியஸ்துவம் மூலம் தமிழர் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு ஏற்படுவதை விரும்பவில்லை அத்துடன் தனது கடலாதிக்கப் பொறிக்குள் சிக்கிவிட்ட புலிகளின் முக்கிய தளபதியை ஒழித்துவிடவே இந்தியா விரும்பியது இதனால் எமது தளபதி கிட்டு இந்தியாவின் நயவஞ்சகச் சூழ்ச்சிக்குப் பலியாக நேர்ந்தது.

தளபதி கிட்டுவும், ஏனைய புலி வீரர்களும் இந்தியாவின் படை பலத்திற்கும் பயமுறுத்தலுக்கும் தலைகுனியவில்லை. எமது இயக்கத்தின் வீர மரபுக்கு ஒப்ப தம்மை தாமே அழித்து தமிழினத்தின் தன்மானத்தை நிலைநிறுத்தினர்.

இந்த தியாக வரலாற்று நிகழ்வு இந்திய அரசின் அரக்கத்தனத்தை உலகத்திற்கு அம்பலப்படுத்துவதாக அமைந்துள்ளது. (சு-சி)

★ யாழ்.நகரில் நேற்று

# நரசிம்மராவ், ஜெயலலிதா கொடும்பாவிகள் எரிப்பு!

(யாழ்ப்பாணம்)

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஆகியோரின் கொடும்பாவிகள் நேற்றிரவு யாழ்ப்பாண பிரதான பஸ் நிலையத்தில் எரிக்கப்பட்டன.

கேணல் கிட்டு உட்பட ஒன்பது விடுதலைப் போராளிகளை பலிகொண்ட இவ்விரு தலைவர்களின் ஆத்திரம் கொண்ட மக்கள், அவர்களின் கொடும்பாவிகளை யாழ். வீதிகளில் ஊர்வலமாக கொண்டுசென்று இறுதியில் எரித்தார்கள்.

கொடும்பாவிக்கு முன்னே பறை முழுங்க ஆண்கள், பெண்கள். குழந்தைகள் உட்பட பெருந்திரளான மக்கள் அழுதுகொண்டு நரசிம்மராவ். ஜெயலலிதா ஆகியோரின் கொடும் பாவிக்கு முன்னே குளறிக்கொண்டும் சென்று கொண்டிருந்தனர்.

கொடும்பாவி ஊர்வலம் யாழ். அரசடிச் சந்தியில் இருந்து இரவு எட்டு மணிக்கு ஆரம்பமாகி வைமன் வீதி, நாவலர் வீதி இராசாவின் தோட்ட வீதி, ஸ்ரான்லி வீதி, பருத்தித்துறைவீதி-ஆஸ்பத்திரி வீதி வழியாக பஸ் நிலையத்தை அடைந்தது.

இரு கொடும்பாவிகளும் அருகருகே வைக்கப்பட்டு நேற்றிரவு 8-30 மணிக்கு ஒப்பாரி வைத்து அழுகையுடன் எரிக்கப்பட்டது.

### மற்றைய ஊர்வலம்

இதேவேளை நேற்று மாலை 6 மணியளவில் கொக்குவிலில் ஆரம்பமான கொடும்பாவி ஊர்வலம் கே. கே. எஸ். வீதி, நாவலர் வீதி, அரசடி வீதி, கோவில் வீதி வழியாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க முன்றலையடைந்தது.

நூற்றுக்கணக்கான ஆண்கள்' பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் உட்பட பெருந்தொகையானோர் இவ்வூர்வலத்தில் கலந்து கொண்டனர்.

இந்தியப்பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவ், தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா ஆகியோரின் கொடும்பாவிகளும் ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்டு சர்வதேச செஞ்சிலுவைச்சங்க முன்றலில் எரிக்கப்பட்டது.

இந்திய அரசிற்கு எதிரான கோஷங்களும் ஊர்வலத்தில் கோஷிக்கப்பட்டன. (ஆ-சி-சு)

---

### கிட்டு விட்டிலும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சலி செலுத்திச் சென்றனர்.

மூத்த உறுப்பினர்களும் போராளிகளும் தளபதி கிட்டுவின் வீட்டிற்கு வந்து அஞ்சலி செலுத்திச் சென்றனர். இவருடன் வீரமரணமடைந்த போராளிகளினது வீடுகளிலும் நூற்றுக்கணக்கில் மக்கள் சென்று அஞ்சலி செலுத்திய வண்ணம் இருந்தனர்.

(157-56)

---

# இந்திய அமைப்புகளுக்கு கூடிய பாதுகாப்பு

(கொழும்பு)

இலங்கையில் செயற்படும் இந்திய நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களுக்கு உடனடியாகப் பாதுகாப்பை மேற்கொள்ளுமாறு, கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் இலங்கை அரசைக் கேட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் தளபதி கிட்டு உட்பட 10 போராளிகள் வீர மரணமடைந்ததை அடுத்து, விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் மேற்படி அமைப்புக்களுக்கு ஏற்படலாமென்ற அச்சத்தினாலேயே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது (உ)

---

# ராவ் - சர்மாவுடன் பிரேமா சந்திப்பு

(புதுடில்லி)

இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா, இந்திய ஜனாதிபதி டாக்டர் சங்கர்தயாள் சர்மாவையும், பிரதமர் நரசிம்மராவையும் தனித்தனியாகச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினர்.

மேற்படி தலைவர்களுடன் ஜனாதிபதி பிரேமா இலங்கை இனப் பிரச்னை, தமிழகத்தில் உள்ள அகதிகள் விடயம், சார்க் உச்சி மாநாடு மற்றும் இரு தரப்பு விடயங்கள் குறித்தும் பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி பிரேமதாசா நேற்று மாலை நாடு திரும்பினார்.

---

# கிளாலி படகுசேவை நேற்று நடைபெறவில்லை

(திருநெல்வேலி)

நேற்று ஞாயிற்றுக்கிழமை கிளாலி ஊடான போக்கு வரத்து இடம்பெறவில்லை. இங்கிருந்தும் பயணிகள் செல்லவில்லை

இன்றும் கிளாலி ஊடான போக்கு வரத்து இடம்பெறமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

நேற்றுமுன்தினம் வீரமரணமடைந்த போராளிகளுக்கு துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது. மறுஅறிவித்தல் வரும்வரை கிளாலி ஊடான போக்கு வரத்து நடைபெறமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

(157)

---

### குடாநாடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தென்னோலைகளினை மூலைக்குமூலை மாலை வரை கட்டி அஞ்சலி செலுத்தினர்

நேற்று ஆரம்பமான வீர அஞ்சலி நிகழ்வு தமிழீழப்பிரதேசமெங்கணும் நெஞ்சை நெகிழவைக்கும் விதத்தில் அமைந்திருந்தது,

முக்கிய சந்திகளிலும், வீதிகளிலும், வீடுகளிலும், வர்த்தக நிலையங்களிலும் பொது ஸ்தாபனங்களிலும் கறுப்புக் கொடி, சிவப்பு மஞ்சள்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. அத்துடன் ஒலிபெருக்கி மூலம் இவரது வீரமரணச் செய்தி அறிவிப்பும்ஒலிபரப்பப்பட்டுக் கொண்டிருந்தன.

யாழ். குடாப்பகுதி எங்கும் ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டு சோக இசையுடன் விடுதலைக்கீதங்களும் ஒலிபரப்பப்பட்டன. நேற்று புலிகளின் குரல் வானொலியில் கிட்டுவினதும் ஏனைய ஒன்பது வீரவேங்கைகளினதும் வீரச்சாவு செய்தியும் அறிக்கையும், விசேட செய்தியில் பால் பிற்பகல் வேளைகளில் ஒலிபரப்பப்பட்டது.

1987ம் ஆண்டு ஜூலை 4ம் திகதி சுதுமலையில் கேர்ணல் கிட்டு ஆற்றிய உரையும் ஒலிபரப்பப்பட்டது

நேற்று யாழ் குடாப்பகுதியிலுள்ள தனியார் கல்வி நிறுவனங்கள் காலையுடனே மூடப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. சகல வாகனங்களிலும் கறுப்புக்கொடி பறக்கவிடப்பட்டிருந்தது.

கேர்ணல் கிட்டுவின் திருவுருவப் படங்கள் எல்லாஇடங்களிலும் வைக்கப்பட்டு மலர்தூவி மலர்மாலை அணிவித்து மக்கள் நள்ளிரவு வரையில் அஞ்சலி செலுத்தினர்.

பல இடங்களில் மக்கள் கூட்டங்கூட்டமாக நின்று கேர்ணல் கிட்டுவினது போராட்ட நிகழ்வுகளை பெருமைப்படக் கதைத்த வண்ணமிருந்ததையும் காணக் கூடியதாக இருந்தது. மொத்தத்தில் தமிழீழமே பெரும் சோகத்தில் மூழ்கியது.

(56-157-158- 159-139-154 சி)

---

### இந்தியாவின் சதிக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சீலன் (குணராஜ்) (சேகரன் குருஸ் மைக்கல் ஜீவா, 2ம் குறுக்குத்தெரு, உதயபுரம், மணியந்தோட்டம், யாழ்ப்பாணம்), ★ கடற்புலி கப்டன் றொசான் (இரத்தினசிங்கம் அருணராசா, அரசடி வீதி. நல்லூர், யாழ்ப்பாணம்) ★ கடற்புலி கப்டன் நாயகன் சிவலிங்கம் கேசவன், பொலிகண்டி, வல்வெட்டித்துறை), ★ கடற்புலி லெப். தூயவன் (மகாலிங்கம் ஜெயலிங்கம், கண்டி வீதி யாழ்ப்பாணம்), ★ கடற்புலி லெப் நல்லவன் (சிவஞானசுந்தரம் ரமேஸ், மணியந்தோட்டம், யாழ்ப்பாணம்) ★ கடற்புலி லெப். அமுதன் (அலோசியஸ். ஜான்சன், 2-ம் குறுக்குத்தெரு. நாவாந்துறை. யாழ்ப்பாணம்).

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (சி)

---

### தகர்க்கப்பட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்துள்ளதாக இந்திய இராணுவம் கூறியுள்ளது.

மேலும் கப்பலிலிருந்து

---

### இன்று

(உடுவில்)

வடமாநில பிரதிக் கல்விப் பணிப்பாளராக (வர்த்தகம்) பதவி உயர்வுபெற்றுள்ள திரு சி. சிவராசாவை கௌரவிக்கும் முகமாக வர்த்தகபாட ஆசிரி

---

# கண்ணீர் அஞ்சலி

## மண்ணுக்காக உயிர் நீத்த மறவர் தலைவ!



லும் நூற்றுக்கணக்கில் மக்கள் சென்று அஞ்சலி செலுத்திய வண்ணம் இருந்தனர்.
(157-56)

மற்றைய ஊர்வலம் இதேவேளை நேற்று மாலை 6 மணியளவில் கொக்குவிலில் ஆரம்பமான கொடும்பாவி தென்னோலைகளை மூலைக்குமூலை மாலை வரை கட்டி அஞ்சலி செலுத்தினர்.

நேற்று ஆரம்பமான வீர அஞ்சலி நிகழ்வு தமிழீழப்பிரதேசமக்களும் நெஞ்சை நெகிழவைக்கும் விதத்தில் அமைந்திருந்தது.

முக்கிய சந்திகளிலும், வீதிகளிலும், வீடுகளிலும், வர்த்தக நிலையங்களிலும் பொது ஸ்தாபனங்களிலும் கறுப்புக் கொடி, சிவப்பு மஞ்சள்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. அத்துடன் ஒலிபெருக்கி மூலம் இவரது வீரமரணச் செய்தி அறிவிப்பும்ஒலிபரப்பப்பட்டுக் கொண்டிருந்தன.

யாழ். குடாப்பகுதி எங்கும் ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டு சோக இசையுடன் விடுதலை ... துடன் ஏனைய ஒன்பது வீரவேங்கைகளினதும் வீரச்சாவு செய்தியும் அறிக்கையும், விசேட செய்தியில் பல பிற்பகல் வேளைகளில் ஒலிபரப்பப்பட்டது.

1987ம் ஆண்டு ஜூலை 4ம் திகதி சுதுமலையில் கேர்ணல் கிட்டு ஆற்றிய உரையும் ஒலிபரப்பப்பட்டது.

நேற்று யாழ் குடாப்பகுதியிலுள்ள தனியார் கல்வி நிறுவனங்கள் காலையுடனே மூடப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. சகல வாகனங்களிலும் கறுப்புக் கொடி பறக்கவிடப்பட்டிருந்தது.

கேர்ணல் கிட்டுவின் திருவுருவப் படங்கள் எல்லாஇடங்களிலும் வைக்கப்பட்டு மலர்தூவி மலர்மாலை அணிவித்து மக்கள் நள்ளிரவு வரையில் அஞ்சலி செலுத்தினர்.

பல இடங்களில் மக்கள் கூட்டங்கூட்டமாக நின்று கேர்ணல் கிட்டுவினது போராட்ட நிகழ்வுகளை பெருமைப்படக் கதைத்த வண்ணமிருந்ததையும் காணக் கூடியதாக இருந்தது. மொத்தத்தில் தமிழீழமே பெரும் சோகத்தில் மூழ்கியது.

(56-157-158-159-139-154 சி)

இதேவேளை ஜனாதிபதி பிரேமதாசா நேற்று மாலை நாடு திரும்பினார்.

# கிளாலி படகுசேவை

## நேற்று நடைபெறவில்லை

(திருநெல்வேலி)

நேற்று ஞாயிற்றுக்கிழமை கிளாலி ஊடான போக்குவரத்து இடம்பெறவில்லை. இங்கிருந்தும் பயணிகள் செல்லவில்லை.


இன்றும் கிளாலி ஊடான போக்குவரத்து இடம்பெற மாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

நேற்றுமுன்தினம் வீரமரணமடைந்த போராளிகளுக்கு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது. மறுஅறிவித்தல் வரும்வரை கிளாலி ஊடான போக்குவரத்து நடைபெறமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

(157)


# கண்ணீர் அஞ்சலி

## மண்ணுக்காக உயிர் நீத்த மறவர் தலைவ!



மண்ணுக்காக உயிர் நீத்த மறவர் தலைவ! ஈழத் தமிழ் நிலமே நின் இலக்கு இவ் இலக்கு நோக்கிய நின் பயணம் ஒரு வீர காவியம் எத்தனை இடர்கள்? அத்தனையையும் முறுவல் முகத்துடன் தாண்டினாய். தமிழீழ மக்கள் உள்ளக் கோயில்களில் பொற்சிலையாய் அமைந்தாய். போற்றப்படுகிறாய். காலம் கடந்தும் போற்றப்படுவாய். சொந்த மண்ணின் மீட்புக்காக உயிர் ஈந்த மறவர் செல்வங்களுக்குத் தலைமைதாங்கி, மீண்டும் எம் மண் நோக்கி நீங்கள் வருகை தரவேண்டாமா?

'கிட்டு'வாகி எம்கிட்டே நின்றாய்
இன்று சிட்டாகிப் பறந்தனையே!

'இழிபடு கொலை தண்டம்' — இதனையே அரசியல் ஆக்கிக்கொண்ட கயவர் உன்னைச் சிறைப்படுத்தவும் துணிந்தனரோ? வீர சுதந்திரம் வேண்டி நின்ற உன்னைச் சிறைப்படுத்தவும் கூடுமோ? நீ ஒரு மகா காவியம். ஆனால் சுவர்க்கத்தில் அமரத்துவம் அடையும் காவியம் அல்ல. தமிழ் ஈழ மண்ணின் மீட்பில் தான் உன் காவியம் முற்றுப்பெறும்.

## தமிழ் மக்கள் உள்ளக் கோயில்களில் பொற்சிலையாய் அமைந்தாய்

உன் வீர வரலாற்றுக் கோலங்கள், காட்சிகளாய், வீரம் விளைக்கும் கானமாய், நின்று நிலைத்துத் தமிழ் மறவர் குலத்துக்கு மேலும் ஊட்டமும், உணர்வும் தந்து வீரம் படைக்கும். இது உறுதி.

வீர வணக்கம் மட்டும் தானே எம்மால் முடிந்தது.
செய்கின்றோம்; பெறுக.

**மீண்டும் வருக வீரனே!**

இவருடன் வீரச் சாவை எய்திய ஏனைய வீர வேங்கைகளுக்கும் எமது அஞ்சலி.

**கண்ணன் லொட்ஜ்,** பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

(சி 7147)


## இந்தியாவின் சதிக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சீலன் (குணராஜ்) (சேகரன் குரூஸ் மைக்கல் ஜீவா, 2ம் குறுக்குத்தெரு, உதயபுரம், மணியந்தோட்டம், யாழ்ப்பாணம்), ★ கடற்புலி கப்டன் றொசான் (இரத்தினசிங்கம் அருணராசா, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்) ★ கடற்புலி கப்டன் நாயகன் சிவலிங்கம் கேசவன், பொலிகண்டி, வல்வெட்டித்துறை), ★ கடற்புலி லெப். தூயவன் (மகாலிங்கம் ஜெயலிங்கம், கண்டி வீதி யாழ்ப்பாணம்), ★ கடற்புலி லெப் நல்லவன் சிவஞானசுந்தரம் ரமேஸ், மணியந்தோட்டம், யாழ்ப்பாணம்) ★ கடற்புலி லெப். அமுதன் (அலோசியஸ், ஜான்சன், 2-ம் குறுக்குத்தெரு, நாவாந்துறை, யாழ்ப்பாணம்).

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

(சி)

## தகர்க்கப்பட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்துள்ளதாக இந்திய இராணுவம் கூறியுள்ளது.

மேலும் கப்பலிலிருந்து மீட்ட 4 சடலங்களும் கைது செய்த 9 பேரும் கரைக்கு கொண்டுவரப்படுவதாக இந்திய அதிகாரிகள் கூறினர்.

இதேவேளை இக் கப்பலிலிருந்து வீரச்சாவடைந்த ஏனைய 5 பேரினதும் உடல்களுக்கு என்ன நடந்ததென்பது பற்றி இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

(கி)

## 3 நாட்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொழில் இடங்கள், கல்வி நிலையங்கள், செயலகங்களில் கறுப்புக்கொடி பறக்கவிடப்பட்டு துக்கத்தை அனுஷ்டிப்பதோடு கடமையில் ஈடுபடுபவர்கள் கறுப்புப்பட்டி அணிந்து துக்கத்தையும், கண்டனத்தையும் வெளிக்காட்டுவர். சகல செயலகங்களிலும் முதன்மை நிறுவனங்களிலும் தமிழீழ தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்படும். அத்தோடு முக்கிய இடங்களின் ஒலிபெருக்கி பொருத்தப்பட்டு சோககீதம் இசைக்கப்படும்.

இறுதி நாளான 20ந் திகதி புதன்கிழமை அன்று முழுமையான கதவடைப்பு மேற்கொள்ளப்படும் இறுதி நாளன்று இம்மாவீரர்களின் நினைவுருவப் படங்கள் தாங்கிய பவனியும், இராணுவ அணிவகுப்பு மரியாதை நிகழ்வும், நினைவுக் கூட்டமும் அதனைத் தொடர்ந்து கண்டனப் பொதுக்கூட்டமும் நடைபெறும்.

(சு)

## இன்று

(உடுவில்)

வடமாநில பிரதிக் கல்விப் பணிப்பாளராக (வர்த்தகம்) பதவி உயர்வுபெற்றுள்ள திரு சி.சிவராசாவை கௌரவிக்கும் முகமாக வர்த்தகபாட ஆசிரியர்களும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களும் இணைந்து மதிய போசனத்துடன் கூடிய பாராட்டுவிழா ஒன்றை நடாத்தவுள்ளனர்.

(109)

★

(உடுவில்)

நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலையில் மூன்றாண்டு கல்வி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டிட திறப்பு விழா இன்று 18ந் திகதி காலை 10 மணியளவில் அதிபர் திரு. இ. வல்லிபுரம் தலைமையில் நடைபெறும். பண்டத்தரிப்பு, மருதனுமட கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் திரு. சி. வே. மகேசவேலு, திரு. சு. இரத்தினராசா ஆகியோர் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்கின்றனர்.

(109)


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி,63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு ஜனவரி மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Nnmber B/10336/B